**குறும்பட அட்டவணை**

I. Coastal systems Research

| படம் 1 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(Way to Prospoerity – Kudankulam Experience) | செழுமைக்கான வழி - கூடங்குளத்தின் அனுபவம் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | இந்திய அணு ஆராய்ச்சித் துறை,<br>மத்திய அரசு |
| பார்வையாளர் இலக்கு | வேளாண் அறிஞர்கள், ஊரக பகுதி மக்கள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 10.50 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | வறட்சி மிகுந்த பூமியான கூடங்குளத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்று வாழ்வியல் வழிமுறைகள் மூலம் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதை சித்தரிப்பது தான் இந்த குறும்படம். அங்குள்ள அனுமின் நிலையத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள மாதிரிப் பழப் பண்ணை மற்றும் காய்கறி தோட்டம் ஆகியவற்றால் மக்கள் எத்தகைய பலன்களை பெற்றுள்ளனர் என்பதையும், விவசாயத்திற்கு மாற்றாக என்னென்ன சிறுதொழில்களை அப்பகுதி மக்கள் மேற்கொண்டுள்ளனர் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. முன்முயற்சியும், உரிய திட்டமிடலும் இருந்தால் எத்தகைய இடத்திலும் மக்கள் தாமாகவே வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்பதை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளனர். |

| படம் 2 | |
|---|---|
| படத்தின் பெயர் (Biological Paradise of Andhara Pradesh) | **ஆந்திராவின் உயிரியல் சொர்கம்** |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | இந்திய - கனடா சுற்றுச் சூழல் நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | வேளாண் அறிஞ்சர்கள், ஊரகப் பகுதி மக்கள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 10.50 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | காடுகளைச் சார்ந்து தங்களது வாழ்வு திகழ்ந்த காரணத்தினால், சதுப்பு நிலக்காடுகளை அழித்து வந்த மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் பங்கேற்போடு வனப்பகுதிகளை மீண்டும் உயிர்பித்த வித்தை குறித்து விளக்குவத்து தான் இந்த குறும்படம்.<br><br>ஆந்திர மாநிலத்தின் பைரவலங்கா பகுதி சதுப்புநிலப் பகுதியாகும். இப்பகுதியில் வாழும் மக்கள், துவக்கத்தில் இந்த காடுகளை பல்வேறு வகையில் சீர்குலைத்து தங்களது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து வந்தனர். இதனால் இயற்கை வளம் பெருமளவில் சுரண்டப்பட்டு காட்டு வளம் பெருமளவு அழிந்து வந்தது. இந்நிலையில் தான் அப்பகுதியில் தனது சேவையை துவக்கியது ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம். இதன்பின் ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த சமுதாய செயல்பாட்டின் மூலம், தற்போது பெருமளவு வனப்பகுதி சீரமைக்கப்பட்டு காட்டுவளம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. காடுகளை சீரமைக்கும் அதே வேளையில், காடுகளை அழிப்பதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு புகையில்லா அடுப்புகளும், வீடு கட்டவும், வேலி அமைக்கவும் தேவையான சவுக்கு மரக்கன்றுகளை வீட்டின் பின்புறத்திலேயே வளர்ப்பதற்கான வழிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் நிலையான வருமானத்தை ஈட்டித் தரும் வகையில் பல்வேறு வகையான சிறு மற்றும் குறுந்தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டு மக்களின் வாழ்க்கையில் தற்போது எத்தகைய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குகிறது இந்த குறும்படம். |

| | |
|---|---|
| | சீரமைக்கபட்ட சதுப்புநில காடுகள் மூலம் தங்களுக்கு எத்தகைய பலன்கள் கிடைத்துள்ளது என்பதை மக்கள் வாய்மொழியாகவே படம்பிடித்துள்ளதால் இத்தகைய குறும்படங்கள் பிறருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுகின்றன. மேலும் சதுப்புநிலக் காடுகளை சீரமைத்து பராமரிக்க வேண்டிய அவசியம், வழிமுறை ஆகியவை குறித்தும் உரிய உதாரணங்களோடு விளக்கியுள்ளனர். சிறுதொழில்நுட்ப வசதி இருந்தாலே பிந்தங்கியுள்ள கிராமப்பகுதிகளை விரைவில் முன்னேற்றிக் காட்டிட முடியும் என்பதற்கு உதாரணமாக அமைந்துள்ளது ஆந்திராவின் உயிரியல் சொர்கம் |

| படம் 3 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(Mangrove Wet lands of Pitchavaram) | பிச்சாவரத்தின் சதுப்பு நிலக் காடுகள் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | இந்திய - கனடா சுற்றுச் சூழல் நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | வேளாண் அறிஞர்கள், ஊரகப் பகுதி மக்கள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 09.03 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | தமிழகத்தில் உள்ள பிரபலமான சைவத்தலங்களில் ஒன்றான சிதம்பரத்தை அடுத்துள்ள பிச்சாவரம், சதுப்பு நில வளத்தை தன்னகத்தே கொண்ட சிறப்புமிக்க இடமாகும். பஞ்சபூத ஆலயங்களில் ஆகாயத்தைக் குறிக்கும் சிதம்பரம் நடராஜர் கோயிலின் ஸ்தல விருட்சமாகத் திகழும் தில்லை மரமும் மருத்துவ குணம் வாய்ந்த ஒரு வகை சதுப்பு நில காட்டு மரமே. இத்தகைய சதுப்பு நிலக்காடுகள் நல்ல நீரும் உப்பு நீரும் கலக்கும் முகத்துவாரங்களில் காணக்கூடியவை. இத்தகைய காடுகளை மக்கள், விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் எவ்வாறெல்லாம் அழித்து வந்தனர், இத்தகைய காடுகளால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் என்னென்ன, விழிப்புணர்வு முயற்சிகளுக்குப் பிறகு மக்கள் ஒருங்கிணைந்து தற்போது எவ்வாறெல்லாம் இப்பகுதியில் சதுப்பு நிலக்காடுகளை பாதுக்காக்கப்டுகின்றனர் என்பது போன்ற தகவல்களை விபரமாக எடுத்துரைக்கிறது இந்த குறும்படம்.<br><br>மருத்துவ குணமும், மண் அரிப்பைத் தாங்கக் கூடிய வலிமையையும் பெற்ற இவ்வகை மரங்கள் நீர்வாழ் உயிரினங்களின் இனவிருத்திக்கும் பெருமளவில் உதவி புரிகிறது. சுமார் எழுநூறு ஹெக்டர் சதுப்பு நிலப்பரப்பு மக்களிடையே விழிப்புணர்வு இல்லாத காரணத்தால், முன் காலங்களில் அழிக்கப்பட்ட போதும், பொதுமக்கள், வனத்துறை உள்ளிட்ட அரசுத் துறைகள் ஆகியவற்றுடன் இணைந்து தற்போது பெருமளவு |

| | |
|---|---|
| | காட்டுப்பகுதியை ம.சா.சுவாமிநாதன் ராய்ச்சி நிறுவனத்தினர் உயிர்பித்துள்ளனர் என்பதை விளக்கும் இப்படம், வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய மாற்றுத் தொழில்களாக இறால் வளர்ப்பு, நண்டு வளர்ப்பு, சணல் கயிறு திரிக்கும் தொழில் போன்ற குறுந்தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டு மக்கள் வாழ்வில் இவை ஏற்படுத்தியுள்ள மலர்ச்சியையும் விளக்குகிறது. |

| படம் 4 | |
| --- | --- |
| படத்தின் பெயர் | ஒரிஸாவின் சதுப்பு நிலக்காடுகள் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | இந்திய - கனடா சுற்றுச் சூழல் நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | வேளாண் அறிஞர்கள், ஊரகப் பகுதி மக்கள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 10.50 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | காட்டு வளத்தைக் காப்போம், மனித வளத்தை மேம்படுத்துவோம் என்பதைத் தாரக மந்திரமாக ஏற்று, ஒரிஸா மாநில கடலோர பகுதிவாழ் மக்கள் தற்போது முழுமனதோடு சதுப்பு நிலக் காட்டு வளத்தை பாதுகாத்து வருகின்றனர். தங்கள் கிராமங்களில் உள்ள அனைத்து அமைப்புகளையும் ஒன்றிணைக்கும் வகையில் 'லூனா ஜங்கல சம்ரக்ஷன சமிதி' (Luna Jungala Samrakshana Samiti) என்ற அமைப்பினை உருவாக்கி தங்கள் பகுதியின் சுற்றுச்சூழலை எவ்வாறு காத்து வருகின்றனர் என்பதை விளக்குதே இந்த குறும்படம்.<br><br>இந்த அமைப்பின் மூலம் 'தெங்கப்பள்ளி' எனும் வனப்பாதுகாப்புக் குழுவை ஏற்படுத்தி ஒவ்வொரு குடும்பத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்கும் ரோந்துப் பணிகளை இங்கு ஏற்படுத்தி உள்ளனர். மேலும் இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் அங்கு சூழியல் சார்ந்த பல்வேறு குறுந்தொழில்களை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும், மக்கள் பங்கேற்புடனான இந்த திட்டத்தின் வெற்றி மூலம் தற்போது ஒரிஸாவின் பதினான்கு கடலோர கிராமங்களில், அழிக்கபட்ட சுமார் நானூறு ஹெக்டர் நிலப்பரப்பிலான காடுகளுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டு, மொத்தமாக சுமார் ஆயிரத்தி ஐநூறு ஹெக்டர் நிலப்பரப்பு காடுகள் சீராக பராமரிக்கப்படுவதாகவும் இதில் தகவல் வழங்கப்பட்டுள்ளது. |

| படம் 5 | |
|---|---|
| படத்தின் பெயர் (Message from Mangrove wetlands) | சதுப்பு நிலக் காடுகளிலிருந்து ஒரு செய்தி |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | இந்திய - கனடா சுற்றுச் சூழல் நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | வேளாண் அறிஞ்சர்கள், ஊரகப் பகுதி மக்கள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 10.56 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் கடலோரப் பாதுகாப்பு ஆரய்ச்சி பிரிவினர் தமிழகம், ஆந்திரம், ஒரிஸா போன்ற மாநிலங்களின் கடலோர மாவட்டங்களில் உள்ள சதுப்பு நில வனப்பகுதிகளை பாதுகாக்க மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்த தொகுப்பே சதுப்பு நிலக் காடுகள் பற்றிய இந்தக் குறும்படம்.<br><br>மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டுள்ள இந்த குறுமபடத்தின் முதல் பகுதி தமிழகத்தின் பிச்சாவரம், சிதம்பரம் போன்ற பகுதிகள் குறித்தும், ஆந்திரம் மற்றும் ஒரிஸா மாநிலங்களில் சதுப்புநில காடுகளை பராமரிக்க மேற்கொண்டுள்ள பணிகள் குறித்தும் இதில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சதுப்பு நிலக்காடுகளின் வரலாறு, "வற்றின் இன்றைய நிலை, இந்த பாதுகாப்பு முயற்சியில் மக்களின் பங்கேற்பு என விரிவாக இக்குறும்படம் எடுத்துரைக்கிறது. |

| படம் 6 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>**(Gulf of Mannar)** | மன்னார் வளைகுடா |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2003 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | |
| பார்வையாளர் இலக்கு | சமூக ஆர்வலர்கள், ஊரகப் பகுதி மக்கள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | தமிழ் |
| வடிவம் | வி.சி.டி, மற்றும் பீட்டா |
| காலம் | 15 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | இராமநாதபுரம், தூத்துக்குடி போன்ற தமிழக கடலோரப்பகுதிகளில் உள்ள கடல்வளங்களைக் காக்க அப்பகுதிகளில் எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை விளக்குவது தான் மன்னார் வளைகுடா.<br><br>மீன்பிடித் தொழிலில் புகுந்துவிட்ட தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இயற்கை வளங்கள் பெருமளவு அழிக்கப்பட்டு சுற்றுச்சூழல் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அவல நிலையை மாற்ற மத்திய ஊரக வளர்ச்சித்துறை, மத்திய கடல் மற்றும் மீன்வள ஆராய்ச்சித்துறை போன்ற பல்வேறு தரப்பினருடன் இணைந்து ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மக்களின் பங்கேற்புடன் மேற்கொண்டுள்ள முயற்சிகள் எத்தகைய பலன்களை ஈட்டியுள்ளன என்பதை விளக்குகிறது இந்தக் குறும்படம். மீன்பிடி தொழிலை மட்டுமே நம்பியுள்ள இப்பகுதி மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முத்து வளர்ப்பு, செயற்கை பவளப்பாறை வளர்ப்பு, மீன் ஊறுகாய் தயாரிப்பு போன்ற மதிப்பூட்டப்பட்ட தொழில்களை இங்கு அறிமுகப்படுத்தி, மக்களின் பங்கேற்பை கூடுதலாக்கி, இயற்கை வளப்பாதுக்காப்பு தொடர்பான தங்கள் முயற்சியை இவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக விளக்குகிறது மன்னார் வளைகுடா பற்றிய இந்த குறும்படம் |

II Biodiversity

| படம் 7 | |
|---|---|
| படத்தின் பெயர் (Agro Biodiversity – Key to food, health and Livelihood Security) | வேளாண் உயிரியல் பல்வகைமை (உணவு, ஆரோக்கியம் மற்றும் வாழ்வியல் பாதுகாப்பிற்கான திறவுகோல்) |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2003 / 2005 (புது வடிவம்) |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் / உதவி | ஒன்றிணைந்த வளர்ச்சிக்கான ஸ்விஸ் அமைப்பு |
| பார்வையாளர் இலக்கு | வேளாண் பொதுமக்கள், மலை வாழ் பழங்குடியினர், மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 10 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | இந்த குறும்படம், ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டு வரும் ஸ்கராசியா முக்னோசா மரபணு வங்கியின் செயல்பாடுகள் குறித்த தகவல்களை பார்வையாளர்களுக்கு முழுமையாக வழங்குகிறது. உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் பண்டைய பயிர் வகைகளை நீடித்து காப்பற்றும் ஆராய்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் இந்த பெரும் முயற்சியால் தற்போது பல அரிய வகை தானியங்களும், தினை, சாமை, வரகு போன்ற சிறு தானியங்களும், பழமை வாய்ந்த நெல் ரகங்களும், மூலிகை வகைகளும் காப்பாற்றப்பட்டு மக்களின் தேவையை பூர்த்தி செய்கின்றன. தமிழிநாட்டின் கொல்லி மலை, கேரள மாநில வயநாடு, ஒரிசா மாநில ஜெய்ப்பூர் போன்ற பகுதிகளில் இயங்கி வரும் இது போன்ற சமுதாய மரபணு வங்கிகளால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும் இதில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.<br><br>இயற்கை சீற்றங்களால் மக்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்ட காலங்களில், இந்த மரபணு வங்கி ஆற்றிய பணிகள் குறித்து விளக்கும் அதே வேளையில், இந்த வங்கியால் தங்களுக்கு |

| | |
|---|---|
| | கிடைத்த பலன்கள் குறித்த மக்களின் கருத்துக்களையும் முறையே பதிவு செய்துள்ளது. |

| படம் 8 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>**(Biodiversity, Natural Resources and Livelihood Management)** | உயிரியல் பல்வகைமை, மற்றும்<br>இயற்கை வளப்பாதுகாப்பு மூலம் ஊரக வளர்ச்சி |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | ஒன்றிணைந்த வளர்ச்சிக்கான ஸ்விஸ் அமைப்பு |
| பார்வையாளர் இலக்கு | வேளாண் பொதுமக்கள், மலைவாழ் பழங்குடியினர், மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 14 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | நம்மிடையே கிடைக்கும் அரிய வகை இயற்கை வளங்களை பாதுகாக்கவும், சமூகத்தில் காணப்படும் பொருளாதாரப் பின்னடைவுகளை சரி செய்யவும், நாம் மேற்கொள்ளவேண்டிய முயற்சிகள் என்ன என்பதை உரிய உதாரணங்களுடன் எடுத்துரைக்கும் வழிகாட்டுதல் முயற்சியே இந்த குறும்படம். இதில், கொல்லி மலை, வயநாடு, மற்றும் ஒரிசாவின் ஜெய்ப்பூர் பகுதிகளில் செயல்படும் ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ள பல்வகைமை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறுத்து விளக்க்கப்பட்டுள்ளது.<br><br>இந்த சிறுதானிய வகைகளை சுத்தம் செய்வதற்கு கூடுதல் மனித உழைப்பையும் நேரத்தையும் செலவிட வேண்டிய காரணத்தாலும், வர்த்தக ரீதியாக இதற்கு பெரிய வரவேற்பு இல்லாத காரணத்தினாலும் தான் மக்கள் இவ்வகை சிறுதானியங்களை பெருமளவு விரும்புவதில்லை என்பதைக் கண்டறிந்து, மாற்றாக தினை வகைகளை சுத்தம் செய்வதர்கான இரண்டு ஆலைகள் அமைக்கப்பட்டன. மேலும் வர்த்தக ரீதியிலான தொடர்புகளும் ஏற்படுத்தப்பட்டு தற்போது மீண்டும் கொல்லி பகுதியில் சிறுதானியங்களின் விவசாயம் பெருகி வருவதாக இக்குறும்படம் விளக்குகிறது. இதே போன்று ஜெய்ப்பூரில் வாழும் பழங்குடி இனத்தவர்கள் பாரம்பரியமாக எவ்வழிகளில் தானியங்களை சேமித்து வந்தனர் எனபதை கண்டறிந்து, இன்றைய சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களை |

| | |
|---|---|
| | கூடுதலாக வழங்கி அப்பகுதிகளில் விதை மற்றும் தானிய வங்கிகளை சமுதாய பங்களிப்புடன் நிறுவி உள்ளது குறித்தும், அதன் செயல்பாடுகளால் மக்கள் பெறும் பலன்கள் குறித்தும் இக்குறும்படம் விளக்குகிறது. மூன்றாவதாக கேரள மாநில வயநாடு பகுதிகளில் காணப்படும் அரிய வகை மூலிகை மருந்துகள் மற்றும் மூலிகை குணம் வாய்ந்த நெல் ரகங்கள் குறித்த தகவல்களையும், அப்பகுதி மக்கள் இவ்வகை அரிய சொத்துக்களை எவ்வாறு தற்போது பாதுகாத்து வருகின்றனர் என்பது குறித்தும் விளக்குகிறது இந்த குறும்படம். சமுதாயத்தின் பங்கு இருந்தால் அழிந்து வரும் இயற்கை வளங்களை பெருமளவு பாதுகாத்திட முடியும் என்பதற்கு உதாரணம் தான் இந்த குறும்படம். |

| படம் 9 | |
|---|---|
| படத்தின் பெயர் (Community Agro Biodiversity Centre) | சமூக வேளாண் உயிரியல்பல்வகைமை மையம் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2002 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | ஒன்றிணைந்த வளர்ச்சிக்கான ஸ்விஸ் அமைப்பு |
| பார்வையாளர் இலக்கு | வயநாடு பகுதியை சேர்ந்த பழங்குடியின பெருமக்கள் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 16.50 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | உயிரியல் பல்வகைமை குறித்த குறும்பட வரிசையில் ஒன்றே 'சமூக வேளாண் உயிரியல்பல்வகைமை மையம்' எனும் இந்த பதினேழு நிமிட குறும்படம். இக்குறும்படம் வயநாடு பகுதியில் உள்ள ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் 'சமுதாய வேளாண் ஆதார மையம்', உயிரியல் பல்வகைமை பாதுகாப்பில் மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து விளக்குகிறது.<br><br>மூலிகை வளத்தில் சிறந்து விளங்கும் இப்பகுதியில், இந்த ஆதார மையம் மூலமாக இயற்கை பல்வகைமையை பாதுகாக்கும் முயற்சிகள் குறித்தும், சீரமைப்பு பணிகள் குறித்தும் இதில் விளக்கப்பட்டுள்ளது. மருத்துவ குணம் வாய்ந்த நெல் வகைகள், பாரம்பரிய முறைப்படியான விதைசேமிப்பு, எனபன போன்ற பல்வேறு விஷயங்களை இந்தப்படம் விளக்குகிறது. மேலும் மகளிர் மேம்பாட்டை கருத்தில் கொண்டு இப்பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சூழியல் சார்ந்த பல்வேறு வகை குறுந்தொழில்கள் எவ்வாறெல்லாம் பழங்குடி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தியுள்ளது என்பதையும் விளக்கியுள்ளனர். |

| படம் 10 | |
|---|---|
| படத்தின் பெயர் (Eastern Ghats – Hills of Hopes) | கிழக்கு தொடர்ச்சி மலை - மலைகளின் நம்பிக்கை |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2002 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | ஒன்றிணைந்த வளர்ச்சிக்கான ஸ்விஸ் அமைப்பு |
| பார்வையாளர் இலக்கு | கிழக்குத் தொடர்ச்சி மலையில் வாழும் பழங்குடியினர் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 15.11 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | இயற்கை வளம் பொருந்திய கிழக்குத் தொடர்ச்சி மலையின் பண்டைய நிலை, மற்றும் மாசுப்பட்ட சூழல் காரணமாக இன்று ஏற்பட்டுள்ள சீரழிவு போன்றவற்றை விளக்குகிறது இந்த குறும்படம்.<br><br>இப்பகுதியில் காணப்பட்ட உயிரியல் வளங்கள் குறுத்த தகவல்களை எடுத்துரைக்கும் அதே வேளையில் இத்தகைய வளங்கள் எவ்வாறெல்லாம் சீரழிக்கப்பட்டு வந்தன என்பதையும் விளக்கியுள்ளனர். நீர் வளம், நில வளம், மண் வளம் போன்ற இயற்கை வளங்களை பாதுகாக்கும் அவசியம் குறித்து வலியுறுத்தியும், மனிதனின் தேவை அதிகரித்ததின் காரணமாகவும், நமது கவனக் குறைவின் காரணமாகவும் தான் இந்த வளங்களை இழந்தோம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். பாரம்பரியமாக இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த வேளாண் முறைகள், பதப்படுத்தல் முறைகள், மற்றும் விதை சேமிப்பு முறைகள் குறித்த தகவல்களை வழங்கியுள்ள அதே நேரம் இத்தகைய வளங்களை பாதுகாக்க தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| படம் 11 | |
| படத்தின் பெயர் (Farmers Rights – From Legislation to Implementation) | விவசாயிகளின் உரிமை - சட்டத்திலிருந்து நடைமுறைக்கு |
| தயாரிக்கப்பட்ட வருடம் | |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | இந்திய பயிர் மரபணு ஆதார ஆணையம் |
| பார்வையாளர் இலக்கு | வேளாண்மை மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 16.45 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | சர்வதேச உணவு மற்றும் வேளாண் அமைப்பு வேளாண் பெருங்குடியினருக்கு வழங்கியுள்ள உரிமைகள் என்ன, என்பதையும், அந்த உரிமைகள் நடைமுறையில் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது, கருதிய இலக்கை உண்மையிலேயே எட்டி இருக்கிறதா என்பது போன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது விவசாயிகளின் உரிமையை பறைசாற்றும் இந்த குறும்படம்.<br><br>வேளாண் உற்பத்தியை பெருக்கவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், பாரம்பரிய தானியம், நெல் மற்றும் மூலிகை விதைகளை பாதுகாக்கவும் விவசாயிகள் - குறிப்பாக பழங்குடியினர் எடுத்துக் கொண்ட அக்கரை 1983ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்படாமல் இருந்த நிலையில் தான் ம.சா.சுவாமிநாதன் தலைமையிலான குழு சர்வதேச உணவு மற்றும் வேளாண் அமைப்பிற்கு தலைமை ஏற்றனர். தீவிர விவாதங்களை மேற்கொண்ட இக்குழுவினர் விவாசாயிகளின் நலனைக் காப்பதற்கான பல்வேறு சட்ட திட்டங்களை உருவாக்கினர். இதனைத் தொடர்ந்தே நமது இந்திய நாட்டிலும் பல்வேறு சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. கடந்த இரண்டாயிரது ஓராவது ஆண்டு இந்திய அரசு உருவாக்கிய பயிர் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் நலன் பாதுகாப்பு சட்டம் மற்றும் இரண்டாயிரத்தி இரண்டாம் ஆண்டு இயற்றிய உயிரியல் பல்வகைமை சட்டம் போன்றவற்றில் அரசு, விவசாயிகளுக்கு வழங்கியுள்ள உரிமைகள் என்ன, இச்சட்டங்களால் அவர்கள் பெறும் நன்மைகள் என்ன என்பதையும் |

| | |
|---|---|
| | இக்குறும்படம் விளக்கியுள்ளது. மேலும் இச்சட்டங்களை உரிய முறையில் நடைமுறைபடுத்த நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆய்வு மையங்களை அமைப்பது என்ற அடிப்படையில் கேரள மாநில வயநாடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சமூக வேளாண் பல்வகைமை மையத்தின் செயல்பாடுகளையும், இதனால் அப்பகுதியில் உள்ள விவசாயிகளும் பழங்குடி இனத்தவர்களும் பெறும் நன்மைகள் குறித்தும் இதில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. |

| படம் 12 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(Millets for Better Health) | ஊட்டச்சத்து, உணவு பாதுகாப்பு மற்றும் கூடுதல் வருமானத்தை வழங்கும் சிறு தானியங்கள்<br>(சத்தான தானியங்களும் அதன் நன்மைகளும்) |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2002 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | இந்திய மற்றும் நேபாள நாடுகளில் உள்ள தெற்காசிய கண்டத்திற்கான ஊட்டச் சத்து திட்டம் |
| பார்வையாளர் இலக்கு | ஊரகப் பகுதி மக்கள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 16.31 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | தமிழகத்தின் இயற்கை வளம் பொருந்திய பகுதிகளில் ஒன்று நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லிமலைப் பகுதி. பாரம்பரியமாக தினை, சாமை, வரகு, போன்ற சத்து மிகுந்த தானியங்கள் பயிரிடப்பட்டு வந்த இந்தப் பகுதியில், காலப்போக்கில் இப்பயிர்கள் மீது மக்களின் ஆர்வம் வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்த பிரச்சனையை மையமாகக் கொண்டு உருவானதே 'சத்தான தானியங்களும் அதன் நன்மைகளும்' எனற இந்த பதினாறு நிமிட குறும்படம்.<br><br>இடைபட்ட காலங்களில், சிறுதானிய விவசாயத்தில் ஏற்பட்ட தொய்வு நிலை மாறி மெல்லமெல்ல மக்ள மீண்டும் இச்சிறுதானியங்களை பயிரிடும் வகையில் அவர்களிடையே ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு முயற்சிகள், தற்போது இந்த முயற்சிக்கு கிடைத்துள்ள வெற்றி என நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் பதிவு செய்துள்ளது இந்தப் படம். தினை, சாமை போன்ற சிறுதானியங்களை சுத்தம் செய்ய கூடுதல் நேரமும், மனித உழைப்பும் தேவைப்படுவதாலும் அதற்கு சந்தையில் உரிய விலை கிடைக்காததாலும் தான் இங்குள்ள விவசாயிகள் வேலை குறைந்த, வருமானத்தை அதிகம் ஈட்டித் தரக்கூடிய மரவள்ளி, வாழை போன்ற பயிர்களை பெருமளவு விரும்பி பயிரிட்டனர். இந்நிலையை மாற்றி, கடும் விழிப்புணர்வு முயற்சிகள் மூலம் மட்டுமல்லாது தானியத்தை சுத்தம் செய்வதற்கான அரவை |

| | |
|---|---|
| | இயந்திரங்களையும் அமைத்துக் கொடுத்து பகுதி மக்கள் வாழ்வில் மட்டுமல்லாது, சிறுதானியங்களுக்கும் புது வாழ்வை பெற்றுத்தந்துள்ளது ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்.<br><br>எதிர்காலத்திற்குத் தேவையான விதைகளை பத்திரப்படுத்துவதற்கென தொம்பை என்ற பாரம்பரிய விதை சேமிப்பு முறைகளும் இங்கு தற்போது வழக்கில் வந்துள்ளதாகவும், விவசாயிகள் அறுவடை செய்யும் இத்தகைய வேளாண் பொருட்களுக்கு உள்ளூர் சந்தையில் மட்டுமல்லாது நகரத்தில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் (super markets) எனப்படும் தொடர் சந்தைகளிலும் கூட தற்போது இந்த தானியங்கள் கிடைக்கும் கூடுதல் தகவலையும் வெளியிட்டுள்ளது இந்த குறும்படம். |

| <u>படம் 13</u> | |
|---|---|
| படத்தின் பெயர் | நிரந்தரமான இயற்கை வள மேம்பாட்டை |

| | |
|---|---|
| (Towards Sustainable Mangement of NaturalResources) | நோக்கி.. |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2005 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | பஞ்சாப் வேளாண் பல்கலைக்கழகம் |
| பார்வையாளர் இலக்கு | ஊரகப் பகுதி மக்கள், விவசாயிகள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 06.30 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | பாரம்பரியமிக்க நமது கிராமங்களில் உள்ள நில, நீர் மற்றும் மண் வளங்களைக் காத்து அதன் மூலம் நிரந்தரமான சமுதாய வளர்ச்சியை காண்பது எப்படி என்பதை விளக்குவது தான் இந்த குறும்படத்தின் மையக்கரு.<br><br>தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டம், மற்றும் பஞ்சாப் மாநில லூதியானா மற்றும் ஜபல்பூர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இயற்கைவள மேம்பாட்டு முயற்சிகளை இந்தப் படத்தில் பதிவு செய்துள்ளனர். காலம் பொய்த்த மழை காரணமாக வறண்டு விட்ட புதுக்கோட்டை பகுதியில், மண்ணின் செம்மை தன்மை காரணமாக கிடைக்கும் நீரை தேக்கி வைப்பதற்கான வழிகளும் குறைவே. இந்தக் குறையைக் களைந்து கிடைக்கும் நீரை பாரம்பரிய முறைப்படி பக்குவமாக பயன்படுத்துவது குறித்த அரிய தகவல்களை இக்குறும்படம் செயல் விளக்க வடிவில் வழங்கியுள்ளனர். உரிமட்டை, புதைத்து வைக்கப்பட்ட பானை மூலமாக நீர்பாசனம் போன்ற பல்வேறு அரிய முறைகளை இக்குறும்படம் விளக்கியுள்ளது. இதே போன்று வட மாநிலமான பஞ்சாப் பகுதியில் நீர் தேக்க நிலைகள் எவ்வாறெல்லாம் பராமரிக்கப்படுகின்றன, மண் வளத்தை பாதுக்காக்க அங்கே மேறகொள்ளப்படும் முறைகள் என்ன என்பன போன்றவற்றையும் இக்குறும்படம் விளக்கியுள்ளனர். இயற்கை வள பாதுகாப்பே மனித வள மேம்பாட்டிற்கு "டிக்கல் என்பதை பறைசாற்றுவதே இந்த படம். |

III Ecotechnology

| படம் 14 | |
|---|---|
| படத்தின் பெயர் (Eco Entrepreneurship and Sustainable Development) | சூழியல் சார்ந்த தொழில் வாய்ப்புகள் மூலமான சமுதாய வளர்ச்சி |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2001 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | ஜே. ஆர்.டி.டாடா சூழியல் மையம் |
| பார்வையாளர் இலக்கு | ஊரக மக்கள் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 16.50 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | சமூகத்தில் வேலை வாய்ப்புகள் குறையும் போது தான் உணவுப் பற்றாக்குறை, பசி, பிணி போன்ற பல்வேறு சமூகப் பிரச்சனைகள் தலையெடுக்கின்றன. இதனை கருத்தில் கொண்டு ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் திண்டுக்கல் மாவட்ட கன்னிவாடி பகுதியில் பல்வேறு தொழில் வாய்ப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். அந்தந்த பகுதிகளில் கிடைக்கும் இயற்கை வளங்களை ஆதாரமாகக் கொண்டு இந்த தொழில்கள் மூலம் கன்னிவாடி பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதை விளக்கியுள்ளது இந்த குறும்படம்.<br><br>சூழியல் சார்ந்த, நிலையான வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய வகையில் ஒட்டுண்ணி அட்டை தயாரிப்பு, வாழைக்கழிவிலிருந்து அட்டை, பை போன்றவற்றை தயாரிப்பது என இயற்கையுடன் தொழில்நுட்பத்தை கலந்த புதுவகையான தொழில்முறைகள் இப்பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. சமூக மக்களின் வருமானம் உயரும் அதே வேளையில் இத்தகைய தொழில்கள் துவக்குவதற்கான நிதி உதவிகளை, தொடர்புடைய வங்கிகளிடமிருந்து பெறுவதற்குத் தேவையான உதவிகளும் வழங்கப்படுவதால் இத்தொழிலில், மக்கள் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். |

| | |
|---|---|
| | இது ஒருபுறமிருக்க, ரெட்டியார் சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மூலமாக பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும் தகவல்கள் குறித்தும், பகுதி கிராம தகவல் மையங்களால் மக்களுக்கு கிடைக்கும் பலன்கள் குறித்தும் இக்குறும்படம் தெளிவாக விளக்குகிறது மொத்ததில் இயற்கை சார்ந்த வேலை வாய்ப்புகள் கண்டறியப்பட்டால், எங்குமே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது என்ற கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது ஊரக வளர்ச்சி பற்றிய இந்த குறும்படம். |

| படம் 15 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(Power of Partnership) | பங்கமைப்பும் அதன் பலமும்<br>(MSSRF நண்பர்கள், டோக்கியோ) |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | MSSRF நண்பர்கள், டோக்கியோ, ஜப்பான் |
| பார்வையாளர் இலக்கு | அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 08.49 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | பங்கேற்பும் அதன் பலமும் என்ற இந்த குறும்படம் நாடுகளின் எல்லையைக் கடந்த நாட்டுப்பற்றிற்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இந்திய குடியுரிமை பெற்ற நல்லுள்ளங்களின் உதவியால் நமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியை விளக்குவதே இந்த பங்கேற்பின் பலம்.<br><br>Friends of MSSRF, அதாவது ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் நண்பர்கள் என்ற அமைப்பு, தனி நபர்களையும், நிர்வாகங்களையும் கொண்ட ஒரு சர்வதேச நன்கொடையாளர் குழுவாகும். வளங்குன்றா முன்னேற்றத்திற்கும், வறுமை ஒழிப்பின் மூலமான சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் தங்களை பெரிதும் அர்பணித்துக் கொண்ட இக்குழுவினர் ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தினரின் வழிக்காட்டுதலோடு ஊரக வளர்ச்சித் துறையில் எத்தகைய புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர் என்பதை விளக்குவதே இக்குறும்படம். இக்குழுவினர் வழங்கிய நிதியுதவி கொண்டு உருவான சிறு தொழில்கள் எவ்வாறு வெற்றிநடை போடுகின்றது என்பதை இப்படம் விவரிக்கின்றது. கால்நடை வளர்ப்பு, தேங்காய் எண்ணை பதப்படுத்தும் தொழில், காளான் வளர்ப்பு, உயிரியல் உரம் தயாரிப்பு, மீன் ஊறுகாய் தயாரிப்பு, வாழைக்கழிவில் இருந்து காகித அட்டை, கோப்பு தயாரிப்பு, என பல்வேறு தொழில்கள் இவர்கள் உதவியால் துவக்கப்பட்டுள்ளன. இது வரை சுமார் ஆயிரத்து இருநூறு குடும்பங்கள் இந்தக் கொடை |

| | |
|---|---|
| | உள்ளங்களின் உதவியால் பயனடைந்துள்ளன என்பதும் ஆண்டிற்கு சுமார் இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை ஊரக மக்கள் வருமானம் ஈட்டுகின்றனர் என்பதும் உண்மையிலேயே அங்கீகாரத்திற்கு உரிய செயல் தான். |

| படம் 16 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(Vision Progress and Prospects) | கனவு, வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | ஜே. ஆர்.டி.டாடா சூழியல் மையம் |
| பார்வையாளர் இலக்கு | கிராமப் புறத்தினர், ஊரகப் பகுதி மக்கள், விவசாயிகள், சுய உதவிக் குழுவினர், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 10.13 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | இந்தியா மகிழ்ச்சி நிறைந்த வல்லரசாக வேண்டும் என்ற ரத்தன் டாடாவின் கனவை நினைவாக்கும் விதமாக சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ளது தான் ஜெ.ஆர்.டி.டாடா சூழியல் ஆராய்ச்சி மையம்.<br><br>டாடா நிறுவனத்தினரின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மையம், ஊரக வளர்ச்சி மற்றும் விவாசாயத்தில் வளங்குன்றா முன்னேற்றத்தை அடைய மேற்கொண்டுள்ள முயற்சிகள், அதற்கு மக்களிடையே கிடைத்துள்ள வரவேற்பு போன்ற பல்வேறு விஷயங்களை படம் பிடித்துக் காட்டியுள்ளது, கனவு, வளர்ச்சி மற்றும் எதிர்பார்ப்பு என்ற தலைப்பிலான இந்த பதினோறு நிமிடப்படம். கிராமங்களில் கிடைக்கும் இயற்கையான விளைபொருட்களைக் கொண்டு அங்கு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள சிறுதொழில்கள் அப்பகுதி மக்களின் வாழ்க்கையில் எத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை சிறப்பாக விளக்குகிறது இப்படம்.<br><br>அழிந்து வந்த வரகு, சாமை, தினை போன்ற சிறு தானியங்கள் உற்பத்தி, மீன் ஊறுகாய் தயாரிப்பு, கால்நடை வளர்ப்பு, போன்ற தொழில்கள் துவங்கி மக்கள் கனவிலும் நினைத்துப் பாராத தொழில்களான வாழைக்கழிவிலிருந்து காகித அட்டை தயாரித்தல், அறிவியல் தொழில்நுட்ப அறிவுடனான ட்ரைக்கோகிராமா, சுடோமொனாஸ் |

| | |
|---|---|
| | போன்ற உயிர் உரம் தயாரிப்பு, கையொப்பம் கூட இடத்தெரியாத கிராமப்புறப் பெண்கள் கணிணி மையத்தை நடத்துவது என அவர்கள் கனவிலும் நினைத்துப் பாராத தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி அதில் வெற்றியும் பெறச் செய்துள்ள சூழியல் மையத்தின் நடவடிக்கைகளை வரிசை மாறாமல் படம்பிடித்துள்ளது இந்தக் குறும்படம். |

IV UDRC – VOICING SILENCE

| படம் 17 | |
|---|---|
| படத்தின் பெயர் | அரங்கேறும் எழுச்சி |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | மௌனக்குரல்,<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | மௌனக்குரல், உத்ராதேவி மகளிர் சமத்துவ ஆராய்ச்சி மையம்,<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | கிராமப்புறப் பெண்கள் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | தமிழ் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 12.18 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | கிராமப்புறங்களில் வாழும் மகளிர், சுய உதவிக் குழுக்களை அமைக்கும் போதும், குழுவாக செயல்படும் போதும், தாங்கள் சந்திக்கும் பிரச்சனைகளையும், அவற்றை சமாளித்த விதம் குறித்தும் பிற மகளிருக்கு எடுத்துரைப்பதே அரங்கேறும் எழுச்சி.<br><br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மௌனக்குரல் திட்டத்தின் உதவியுடன் நாடகம் என்னும் ஊடகத்தை கையாண்டுள்ள இந்த இல்லத்தரசிகள் கூட்டு முயற்சியால் எத்தகைய பிரச்சனைகளையும் சமாளிக்க முடியும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளனர். மேலும் ஆண், பெண் என இருபாலாரிடமுமான புரிதலும், ஒருங்கிணைப்பும் தான் சமுதாய முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமையும் என்பதையும் எடுத்துரைக்கின்றனர். பெருமளவு பொருளாதார பின்பலம் இல்லாத நிலையிலும், சமுதாய வளர்ச்சி பற்றிய அக்கறையுடனான தங்களின் தன்னலமற்ற ஈடுபாடு குறித்து இவர்கள் இக்குறும் படத்தில் கூறும் கருத்துக்கள் அனைத்து தரப்பு மகளிருக்கும் தன்னம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது |

| படம் 18 | |
|---|---|
| படத்தின் பெயர் | பனித்தீ |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2003 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | மௌனக்குரல்,<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | மௌனக்குரல், உத்ராதேவி மகளிர் சமத்துவ ஆராய்ச்சி மையம்,<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | கிராமப்புறப் பெண்கள் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | தமிழ் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 47.26 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | இந்திய நாட்டின் இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதத்தின் குறிப்பிடத்தக்க கதாபாத்திரத்தில் ஒன்றான சிகண்டியின் வாழ்க்கையை தனிநபர் நிகழ்வாக விளக்குவதே பனித்தீ. அம்பையாய் இருந்தபோது பீஷ்மரால் சிறையெடுக்கப்பட்டவள், தான் நேசித்த சால்வனால் புறக்கணிக்கப்பட்ட பின் சிகண்டியாய் மாறி பீஷ்மரை பழிவாங்கும் ஒரு தவமே இந்த பனித்தீ. க்ஷத்ரிய தர்மத்தின் பெயரால் நடந்த இந்த நிகழ்வுகளை பாதிக்கப்பட்டவரின் பார்வையில் எடுத்துரக்கிறது இந்த குறும்படம்.<br><br>சுமார் ஐம்பது நிமிடங்கள் அரங்கேற்றப்படும் இந்த நாடகத்தின் திரை வடிவம் தான் இந்த குறும்படம். பாரம்பரியம் மிக்க இசைநாடகத் தன்மைகள், கதைக்கூற்று, உடையமைப்பு, ஒப்பனை என அனைத்து அம்சங்களும் மிக கவனமாக கையாளப்பட்டவிதம் பிரமிப்பிற்குரியதாக அமைந்துள்ளது. இந்த கதாபாத்திரத்தை ஏற்று நடித்துள்ள நாடகக் கலைஞர் உஷாராணி, ஆன் - பெண் என இரு மனநிலைகளையும், இரண்டிற்கும் இடையே உள்ள அழுத்தமான கோடுகளையும் இந்நிகழ்வில் நம் கண்முன் நிறுத்துகிறார்.<br><br>தனது திறமைக்கு சிறந்த சவாலாக விளங்கும் இக்கதாபாத்திரத்தில் சிகண்டியாகவே வாழ்ந்து பார்வையாளர்கள் மனதில் ஆழமாக பதிந்துவிடுகிறார் அவர். ஒரு நாடகத்தை பார்த்த திருப்தி மட்டுமல்லாமல் வரலாற்று சிறப்புமிக்க ஒரு கதாபாத்திரத்தின் வாழ்வை கண்முன் கொண்டு |

| | |
|---|---|
| | வந்து நிறுத்துகிறது 'பனித்தீ' இந்திய நாட்டின் இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதத்தின் குறிப்பிடத்தக்க கதாபாத்திரத்தில் ஒன்றான சிகண்டியின் வாழ்க்கையை தனிநபர் நிகழ்வாக விளக்குவதே பனித்தீ. அம்பையாய் இருந்தபோது பீஷ்மரால் சிறையெடுக்கப்பட்டவள், தான் நேசித்த சால்வனால் புறக்கணிக்கப்பட்ட பின் சிகண்டியாய் மாறி பீஷ்மரை பழிவாங்கும் ஒரு தவமே இந்த பனித்தீ. க்ஷத்ரிய தர்மத்தின் பெயரால் நடந்த இந்த நிகழ்வுகளை பாதிக்கப்பட்டவரின் பார்வையில் எடுத்துரக்கிறது இந்த குறும்படம். சுமார் ஐம்பது நிமிடங்கள் அரங்கேற்றப்படும் இந்த நாடகத்தின் திரை வடிவம் தான் இந்த குறும்படம். பாரம்பரியம் மிக்க இசைநாடகத் தன்மைகள், கதைக்கூற்று, உடையமைப்பு, ஒப்பனை என அனைத்து அம்சங்களும் மிக கவனமாக கையாளப்பட்டவிதம் பிரமிப்பிற்குரியதாக அமைந்துள்ளது. இந்த கதாபாத்திரத்தை ஏற்று நடித்துள்ள நாடகக் கலைஞர் உஷாராணி, ஆன் - பெண் என இரு மனநிலைகளையும், இரண்டிற்கும் இடையே உள்ள அழுத்தமான கோடுகளையும் இந்நிகழ்வில் நம் கண்முன் நிறுத்துகிறார். தனது திறமைக்கு சிறந்த சவாலாக விளங்கும் இக்கதாபாத்திரத்தில் சிகண்டியாகவே வாழ்ந்து பார்வையாளர்கள் மனதில் ஆழமாக பதிந்துவிடுகிறார் அவர். ஒரு நாடகத்தை பார்த்த திருப்தி மட்டுமல்லாமல் வரலாற்று சிறப்புமிக்க ஒரு கதாபாத்திரத்தின் வாழ்வை கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது 'பனித்தீ' |

| படம் 19 | |
|---|---|
| படத்தின் பெயர் | துள்ளல் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | மௌனக்குரல்,<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | மௌனக்குரல், உத்ராதேவி மகளிர் சமத்துவ ஆராய்ச்சி மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | சுய உதவி குழுவினர், கிராமப்புறப் பெண்கள் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | தமிழ் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 16.52 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | புதுவை மாநில உயிரியல் மையத்தின் மகளிர் தின விழாவில் அரங்கேற்றப்பட்ட துள்ளல் நாடகத்தின் பதிவே இந்த குறும்படம்.<br><br>உயிரியல் மையத்தின் உதவியுடன் தங்கள் பகுதிகளில் சுய உதவிகுழுக்களை இயக்கி வரும் இந்தப் பெண்கள் குழுவால் அவர்களட்து வாழ்க்கையில் கிடைத்த பொருளாதார வெற்றி மற்றும் தன்னம்பிக்கை பற்றிய தகவல்களை பிறருக்கு எடுத்துரைக்கும் விதமாக உருவானது தான் இந்த கிராமிய கலைக் குழு. சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மகளிர் மனதில், தன்னம்பிக்கை மற்றும் தைரியத்தை ஏற்படுத்தும் விதமாக நாடகம் என்ற ஊடகம் மூலமாக தங்களது கலைப்பணியை இப்பெண்கள் நடத்தி வருகின்றனர். இது ஒரு பொது விழிப்புணர்வு முயற்சி என்ற வகையில் பதிவு செய்யப்பட்ட இந்த குறும்படம் மாநிலத்தின் எந்த பகுதி மக்களையும் கவரும் வகையில் எளிய நடையில்ய அமைந்துள்ளது. |

V. INFORMATICS

| படம் 20 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(Rural Knowledge centre-Reaching the Unreached) | கிராம வள மையங்கள்<br>(அடைய முடியாத மனித இலக்கை அடைவது) |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2003 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | சர்வதேச வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மையம் (IDRC) |
| பார்வையாளர் இலக்கு | ஊரகப் பகுதி மக்கள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 08.31 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | புதுவை மாநிலத்தில் இயங்கி வரும் கிராம வள மையங்கள், பகுதி கிராம மக்களுக்கு எத்தகைய பலன்களைத் தருகின்றன என்பதை உரிய விளக்கங்களுடன் எடுத்துரைப்பதே கிராம வள மையங்கள் என்ற இந்த குறும்படம்.<br><br>பல அரிய இயற்கை வளங்களைப் பெற்றுள்ள நமது இந்திய கிராமங்களில், அவற்றை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய முறைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும், அனைத்து கிராமங்களையும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மிகுந்ததாய் மாற்ற வேண்டும் என்ற உயரிய எண்ணத்திலும் உருவான இத்தகைய மையங்கள் இன்று மக்களிடையே ஒரு மறுலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. பகுதி மக்களுக்கு தேவையான வேளாண்மை, கல்வி, உடல்நலம், வானிலை, வர்த்தகம் போன்ற தகவல்களையும், ஊரக மக்களுக்கு அரசாங்கம் அறிவித்துள்ள நலத்திட்டங்கள் குறித்த தகவல்களையும் மக்களின் பங்கேற்போடு இந்த மையங்கள் எவ்வாறு வழங்குகின்றன என்பதையும் இக்குறும்படம் தெளிவாக விளக்குகிறது. ஊரக வளர்ச்சிக்கான சர்வதேச அமைப்புடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் உருவான கிராம அறிவு மையங்கள் மற்றும் கிராம வள மையங்கள் சமுதாயத்தில் காணப்படும் பேதங்களை ஓசையின்றி களைந்து புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. |

| | |
|---|---|
| | இந்த மையங்களின் செயல்பாடு, பயன்கள், அதற்கு கிடைத்துள்ள அங்கீகாரம் ஆகியவற்றை முறையே விளக்கியுள்ளது கிராம வள மையங்கள் என்ற இந்த குறும்படம். |

VI. MSSRF

| படம் 21 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(Food for All) | எல்லோருக்கும் உணவு - ஒரு ஆன்மீகப் பரிமாணம் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2002 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | உலக உணவு மையம் |
| நிதி ஆதாரம் | உலக உணவு மையம் |
| பார்வையாளர் இலக்கு | பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 21.23 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | இன பேதமின்றி, அனைத்து மதத்தினராலும் உணவுக்கு வழங்கபப்டும் முக்கியத்துவமும் மனிதனின் வாழ்வில் உணவு எத்தகைய முக்கியத்துவத்தை பெறுகிறது எனபதையும் விளக்கும் வகையிலான இந்த குறும்படத்தில் எடுத்துரைக்கப்படுகிறது.<br><br>உணவு என்பது உடல் நலனைக் காக்க மட்டுமல்லாது, விருந்தோம்பல் என்ற நல்ல எண்ணத்தின் வாயிலாக ஆன்மாவிற்கும் அமைதியைத் தருகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. நம் அன்றாட வாழ்வில் எத்தகைய உணவு பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும், மத ரீதியாக உணவுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் என்னென்ன என்பதை பல்வேறு மதங்களின் தலைவர்கள் வாயிலாக விளக்குகிறது இந்தப் படம். |

| படம் 22 | |
|---|---|
| படத்தின் பெயர் (Golden Jubilee Biotech Park for Women – Siruseri) | பொன்விழா மகளிர் உயிரியல் தொழில்நுட்ப பூங்கா, சிறுசேரி |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2001 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | தமிழக தொழில் வளர்ச்சிக் கழகம் (சிப்காட்), தொழில்நுட்ப பூங்கா, (சிறுசேரி) |
| பார்வையாளர் இலக்கு | சிறு தொழில் முனைவர்கள், பெண்கள் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 07.22 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | சிறுதொழில் தொடங்க விரும்பும் பெண் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்பட்டது தான் சென்னையை அடுத்த சிறுசேரியில் உள்ள பெண்களுக்கான உயிரியல் தொழில்நுட்ப பூங்கா.<br><br>தமிழக தொழில் வளர்ச்சிக் கழகமும், இந்திய உயிரியல் தொழில்நுட்பத் துறையும், ம.சா.சுவாமிநாதன் ராய்ச்சி நிறுவனத்தினரின் தொழில்நுட்ப லோசனையுடன் இருபது ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் ஏழு கோடி ரூபாய் முதலீட்டில் இந்த தொழில்நுட்ப பூங்காவை உருவாக்கியுள்ளனர். பெண்களிடையே மறைந்து கிடக்கும் தனித்திறமைகளை வெளிக் கொண்டு வந்து அதன் மூலம், சமூகத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள பிற மகளிருக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்த இத்தொழில்நுட்ப பூங்கா வழி செய்துள்ளது. இத்தகைய தொழில்நுட்ப பூங்காவின் செயல்பாடுகள் குறித்தும், இங்கு தொழில்புரியும் பெண் முனைவர்களின் அனுபவங்களையும் இப்படம் பதிவு செய்துள்ளது. இருபது தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பூங்காவில் பதினான்காயிரம் சதுரடி நிலப்பரப்பில் மருத்துவ குணம் மற்றும் வர்த்தக மதிப்பு வாய்ந்த பல்வேறு மூலிகைகள் பயிரிடப்பட்டு, அதன் அடிப்படையிலான தொழில்களும் இங்கு மேற்கொள்ளப்படுவதாக இக்குறும்படம் விளக்குகிறது. வேளாண்மை, உணவு, உடல்நலம், |

| | |
|---|---|
| | சுற்றுச்சூழல், அழகுக்கலை என பல்வேறு விஷயங்களை அடிப்படையாகக் கொண்ட இத்தொழில் பூங்காவில் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் தரக்கட்டுப்பாட்டு சான்றிதழ் பெற்ற பின்னரே இங்கு தொழில் தொடங்க அனுமதி வழங்கப்படுகிறது. சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக, ஆசியாவிலேயே முதல் முறையாக அமைக்கப்பட்டுள்ள இந்த தொழில்நுட்ப பூங்காவில் தங்கள் வர்ததகத்தை துவக்கியுள்ள பெண்களின் இந்த முயற்சி சமுதாயத்தில் பின் தங்கியுள்ள பிற பெண்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் வகையில் அமைந்துள்ளது. |

| படம் 23 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(In Rememberance) | நினைவு அஞ்சலி |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2004 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | கல்வியாளர்கள் மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 03.00 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | உரிய பாதுகாப்பு முறைகள் அற்ற சூழலில் 2004ம் ஆண்டு ஜுலை மாதம் பதினாறாம் தேதி, கும்பகோணத்தின் தனியார் பள்ளியில் நிகழ்ந்த கொடும் தீ விபத்தில் உயிரிழந்த பிஞ்சுக் குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உருவானது தான் இந்த 'நினைவு அஞ்சலி'.<br><br>பாதுகாப்பான கல்வி ஒவ்வொரு குழந்தையின் உரிமை என்பதை வலியுறுத்தும் அதே வேளையில் விளையாட்டு மூலம் கல்வி என்ற கொள்கையின் அவசியத்தை இக்குறும்படம் வலியுறுத்துகிறது. இதில் கூறப்பட்டுள்ள அனைத்து விஷயங்களும் மொழி வடிவில் அல்லாமல் இசையின் வாயிலாகவும், காட்சிகளின் வாயிலாகவுமே வலியுறுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது |

| படம் 24 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(Touch and Smell Garden) | பார்வையற்றவர்களுக்கான தொடுதல் மற்றும் முகர்தல் தோட்டம் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2003 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | இந்திய அணு ஆராய்ச்சித் துறை,<br>மத்திய அரசு, மற்றும்<br>ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானியே திட்டம், ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுப் பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 10.00 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | உடலில் குறைபாடுள்ள குழந்தைகளின் நலன் கருதி ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது தான் பார்வையிழந்த மாணவர்களுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 'தொடுதல் மற்றும் முகர்தல் தோட்டம்'.<br><br>முழு ஈடுபாட்டுடன் கற்கப்படும் கல்வி தான் மாணவர்கள் மத்தியில் பெருமளவு தாக்கத்தையும், வரவேற்பையும் பெறும் என்பதை கருத்தில் கொண்டு உருவான இத்தோட்டத்தின் வாயிலாக கண்ணிழந்தோர், இயற்கையின் பன்முகத்தன்மையை அறிவதோடு, இயற்கையின் கொடையாகிய தாவர உலகையும் அதன் செழிப்பையும், உணர்வுகள் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்பதை உரிய காட்சிகளுடன் விளக்கியுள்ளனர். கற்பதின் இனிமையை அதிகரிக்கும் நோக்கில் உருவான மூலிகைத் தோட்டம் பற்றிய இந்த குறும்படம் பிற மாணவர்களின் பன்முக அறிவை வளர்க்க பேருதவியாக அமையும். |

| படம் 25 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(We shall overcome) | எதையும் வெல்வோம் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2005 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | மீனவர்கள், கிராமப் புறத்தினர், ஊரகப் பகுதி மக்கள், விவசாயிகள், மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 07.00 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | தொழில்நுட்ப வளர்ச்சி எத்தனை உயரத்தை அடைந்தாலும் எல்லாமும் இயற்கையில் அடக்கம் என்பதற்கு உதாரணம் தான் சமீபத்திய இயற்கை சீற்றங்களில் ஒன்றான சுனாமி பேரலை. இந்த இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டனர், எவ்வாறு அந்த பாதிப்பில் இருந்து மீண்டு தங்கள் வாழ்க்கையை மீண்டும் துவக்கினர் என்பதை நாடக நடையில் விளக்குவது தான் 'எதையும் வெல்வோம்' என்ற இந்த குறும்படம்.<br><br>சென்னை, புதுவை, சிதம்பரம் என மாநிலத்தின் பல பகுதிகளையும் சுனாமி எவ்வாறு தாக்கியது, தாக்குதல் கடுமையாக இருந்ததற்கு என்ன காரணம், இனி வரும் காலங்களில் இத்தகைய சீற்றங்களின் பாதிப்பின் தாக்கத்தை எவ்வாறு குறைத்துக் கொள்வது என்பன உள்ளிட்ட பல்வேறு அம்சங்களையும் இக்குறும்படம் விளக்குகிறது. கடந்த டிசம்பர் மாதம் இருபத்தியாரம் தேதி நாம் சந்தித்த இழப்புகளை பதிவு செய்துள்ள அதே வேளையில் எத்தகைய மீட்பு நடவடிக்கைகள் மூலம் அரசும், தனியார் தொண்டு நிறுவனங்களும் மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு நல்வாழ்வைத் தந்துள்ளனர் என்பதையும் விளக்கும் இக்குறும்படம் ஒற்றுமையின் வலிமையை உலகுக்கு உணர்த்துகிறது. இந்த சோகத்தின் கீதத்தை உணர வார்த்தைகள் தேவைப்படாத நிலையில், காட்சிகள் மூலமும், இசை வாயிலகவுமே தாங்கள் எண்ணிய இலக்கை படப்பிடிப்புக் குழுவினர் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. |

| படம் 26 | |
|---|---|
| படத்தின் பெயர்<br>(15 Years 15 Steps...) | சுவடுகள் |
| தயாரிக்கப்பட்ட வருடம் | 2005 |
| கருத்தாக்கம் மற்றும் இயக்கம் | தி இந்து ஊடக ஆதார மையம்<br>ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| நிதி ஆதாரம் | ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் |
| பார்வையாளர் இலக்கு | அரசு இயந்திரம், தொண்டு நிறுவனங்கள், நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் அரசு இயந்திரம், தொண்டு நிறுவனங்கள், நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பொது பிரிவினர் |
| மொழி வடிவம் | ஆங்கிலம் |
| வடிவம் | வி.சி.டி, டி.வி.டி மற்றும் பீட்டா |
| காலம் | 22.59 நிமிடங்கள் |
| கருத்துச் சுருக்கம் | ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக வேளான் துறை, நிலையான ஊரக வளர்ச்சித் துறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் சமுதாய மேம்பாட்டுத் துறைகளில் நிகழ்த்தி உள்ள சாதனைகளை பட்டியலிட்டுக் காட்டுவதே 'சுவடுகள்'.<br><br>நிறுவனத்தின் வரலாறு. குறிக்கோள், எய்த இலக்கை அடைவதற்கென கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என ஆரம்பகாலப் பணிகளில் துவங்கி தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளையும் பல்லுலக தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விரிவாக விளக்கியுள்ளது இக்குறும்படம். சமூக வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் முழு ஈடுபாட்டுடனும் மக்களின் பங்கேற்புடனும் அமைந்தால் அதற்கு வெற்றி நிச்சயம் என்பதை தெளிவாக உணர்ந்துள்ளது தான் இந்நிறுவனத்தின் வெற்றிக்கு காரணம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். இருபத்தியிரண்டு நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த குறும்படத்தில் ம.சா.சுவாமிநாதன் ராய்ச்சி நிறுவனம் செயலாற்றும் தமிழகத்தின் பிற பகுதியில் உள்ள கிளைகளின் செயல்பாடுகளும், கேரளம், ந்திரம், புதுவை, ஒரிசா கிய மாநிலங்களில் உள்ள கிளைகளின் செயல்பாடுகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. |